
# ஜாமக்காரன்
# JAMAKKARAN

**VOLUME - 1** **Reg NO.TNBIL/2016/70171** **ISSUE - 5**

**MAY 2017 TAMIL & MALAYALAM**

**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**




*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*

**0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com**



**கர்த்தருக்குள் அன்பானவர்களே!**

உயிர்த்தெழுந்த கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.

உங்கள் யாவரையும் மறுபடியும் ஜாமக்காரன் மூலமாக சந்திப்பதில் மிகவும் சந்தோஷம்.

கடந்த 2017 ஜனவரி முதல் மே மாதம் வரை நடந்த எல்லா கூட்டங்களும் மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

■ **இலங்கையில்** ஏப்ரல் மாதம் இலங்கை **GALLE FACE** என்ற இடத்தில் CHRIST CHURCHல் நடந்த அத்தனை கூட்டங்களையும் கர்த்தர் கிருபையாக ஆசீர்வதித்தார்.

■ 2017 **மார்ச்** மாதம் 14ம் தேதி நடந்த **ஒரு பகல் உபவாச** ஜெபத்தில் கர்த்தர் நிறைய பேருக்கு ஆசீர்வாதத்தையும், சுகத்தையும் அருளி செய்தார். சுகம் கிடைக்காமல் தொடர்ந்து வேதனையை அனுபவித்துக்கொண்டிருப்பவர்களும் உண்டு.

2017 மார்ச் 14ம் தேதி வந்து சேர்ந்த ஜெபகுறிப்புகளுக்கும், அதன்பின் தாமதித்து வந்த பல ஜெபகுறிப்புகளுக்கும் தொடர்ந்து ஜெபம் ஏறெடுக்கப்படுகிறது.

■ இந்த ஜாமக்காரனில் ஜெபத்துக்கு கிடைத்த பதில்களாக வந்த சாட்சிகள் சில கடிதம் மூலமாகவும், E-mail மூலமாகவும் கிடைத்தது. அப்படி வந்த இரண்டு வித்தியாசமான **சாட்சிகளை** இங்கு வெளியிடுகிறேன். அதை அடுத்த பக்கத்தில் வாசிக்கலாம்.

ஜா ம க் கா ர ன் JAMAKKARAN

# MAY 2017

# இரண்டு வித்தியாசமான சாட்சிகள்

**சாட்சி - 1,** அன்புள்ள டாக்டர் அவர்களுக்கு,

சமீபத்தில் டாக்டர்கள் என்னை பரிசோதித்து பரிசோதனைக்கு அனுப்பிய **கேன்ஸர்** பயாப்சி ரிப்போர்ட் சந்தோஷத்தை கொடுத்தது. நான் பம்பாயில் 5 வருடமாக குடியிருக்கிறேன். நான் கான்ஸர் வியாதியால் பாதிக்கப்பட்டதால் எனக்கு **14 கீமோ தெரப்பி** கொடுத்தார்கள். அதன்பின் இனி கீமோ டிரீட்மெண்ட் வேண்டாம் என்றும் வெறும் மாத்திரை மட்டும் உட்கொள்ளுங்கள் என்றும் கூறி அனுப்பிவிட்டார்கள். மாதா மாதம் செக்கப்புக்கு வர சொன்னார்கள். இரண்டு வருடங்கள் தொடர்ந்து செக்கப்புக்கு போனேன். பிரச்சனை ஏதும் இல்லாததாலும், என் உடலில் இழந்த சக்தி திரும்ப வந்துவிட்டதாலும், என்னை இனி செக்கப்புக்கு வரவேண்டாம் என்று டாக்டர்கள் கூறிவிட்டனர்.

உதிர்ந்துப்போன **தலைமுடி** நன்றாக வளர்ந்துவிட்டது. தோலில் நல்ல மாற்றத்தோடு பழைய அழகு எனக்கு திரும்ப கிடைத்துவிட்டது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம். ஆனால் சிகிச்சை செய்த 6 வருடங்களுக்குபிறகு என் சரீரத்தில் ஒரு **புது கட்டி** உண்டானது. உடனே அதே ஆஸ்பத்திரிக்கு சென்று காட்டினேன். அவர்கள் பரிசோதித்து பார்த்து இது சாதாரண கட்டிதான் சில மாத்திரையில் கரைந்துவிடும் என்று கூறி மாத்திரை மட்டும் கொடுத்து அனுப்பிவிட்டார்கள். ஆனால் சில மாதங்களில் அதே கட்டி பெரிதாக வளருவதை உணர்ந்தேன்.

மறுபடியும் பயந்தவாறு ஆஸ்பத்திரிக்கு சென்று டாக்டரிடம் காட்டினேன். அவர்கள் ஒரு கருவியை கொண்டு **கட்டியை** அளந்து பார்த்துவிட்டு கட்டி வளரவில்லை என்றாலும் **பயாப்ஸ்சி டெஸ்ட்** பார்த்து பிறகு கட்டியை எடுத்துவிடலாம் என்றார்கள்.

மார்ச் 14ம் தேதி **ஒரு பகல்** உபவாசத்தைக்குறித்து ஜாமக்காரனில் வாசித்தேன். ஜெப குறிப்பாக இவ்விவரத்தை எழுதி உங்களுக்கு அனுப்பியிருந்தேன். நானும் நீங்கள் எழுதியபடி அதே நாளில் வீட்டில் உபவாசித்து அழுது ஜெபித்தேன். ஏற்கனவே நான் எடுத்துக்கொண்ட 14 கீமோ தெரப்பியால்( Khemo Theraphy) நான் பட்டபாடுகள்போதும் ஆண்டவரே, என்னை காப்பாற்றும் என்று கெஞ்சினேன்.

14ம்தேதி **உபவாச ஜெபம்** முடிந்து 6வது நாள் **பையாப்ஸி ரிப்போர்ட்** வந்தது. அது கேன்ஸர் கட்டியில்லை என்றும் கட்டி பெரியதாக வளந்தால் அதை ஆபரேசன் செய்து நீக்கிவிடலாம் என்றும் கூறி மாத்திரை மட்டும் கொடுத்து அனுப்பிவிட்டனர். கர்த்தர் என் கண்ணீரை கண்டார். அது **கேன்ஸர் கட்டிஅல்ல** என்று லேபிலிருந்து வந்த அந்த ரிப்போர்ட் **என்பயத்தை** நீக்கி சந்தோஷத்தை கொடுத்தது.

14ம்தேதி உபவாச ஜெபத்தில் ஜெபித்த **உங்களுக்கும்**, உங்கள் குழுவினருக்கும் என் மனமார்ந்த நன்றியை கூறிக்கொள்கிறேன். எனக்கு வயது 60 வீட்டிலேயே நீங்கள் கூறியதைப்போல ஜெபக்குறிப்புகளை எழுதிவைத்து மற்றவர்களுக்காக ஜெபிக்கும் ஊழியத்தை தொடங்கிவிட்டேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

## சாட்சி - 2 : கேன்ஸர் சுகம் ஆகவில்லை.

என் சொந்த ஊர் கேரளாவில் **பத்தினம்திட்டா**வாகும். நீங்கள் 30 வருடங்களுக்குமுன் என் ஊர் பக்கத்தில் **எலந்தூர்** மார்தோமா சபை கன்வென்ஷனுக்கு வந்தபோது நான் ஹைஸ்கூலில் படித்துக்கொண்டிருந்தேன். உங்கள் கூட்டத்தில்தான் நானும்,என் குடும்பமும் மனம்திரும்பி இரட்சிக்கப்பட்டோம். நான் கல்லூரி படிக்கும்போதே என் பெற்றோர் மார்தோமா சபையை விட்டு விலகி அருகிலுள்ள **பெந்தேகோஸ்தே** சபையில் இணைந்துவிட்டனர். உங்கள் ஜாமக்காரனை 32 வருடங்களாக நாங்கள் வாசிப்பதால் **அன்னிய பாஷையைப்பற்றி** ஒரு தெளிவு எங்களுக்கு உண்டு.

எங்கள் **சபையில்** உள்ளவர்கள் **அன்னிய பாஷை** பேசுவார்கள். ஆனால் நாங்கள் யாரும் **அன்னிய பாஷை பேசுவதில்லை.** எனக்கு கல்யாணமாகி மூன்று பிள்ளைகள். எல்லாரும் வட இந்தியாவில் வேலை கிடைத்து சென்றுவிட்டனர். வட இந்தியாவிலேயே எங்கள் கேரள நாட்டின் மலையாள குடும்பத்தை சேர்ந்தவர்களை அவர்களை திருமணம் முடித்து, அங்கேயே சொந்த வீடுகள் கட்டி அங்கேயே செட்டில் ஆகிவிட்டனர். எனக்கு திடீரென்று சரீரத்தில் மூன்று இடத்தில் கேன்ஸர் கட்டி உண்டானது. அது **கேன்ஸர்** என்று டாக்டர்கள் உறுதிபடுத்தி **டிரிட்மெண்ட்** எடுக்க சொன்னார்கள். ஆனால் நான் **விசுவாசத்தில் என் வியாதி சுகமாகிவிடும் என்றும்,** வலி ஏதும் இல்லை. ஆகவே வைத்தியம் செய்ய டாக்டர்கள் வற்புறுத்தியும் நான் ஆஸ்பத்திரிக்கு செல்லவில்லை. மூன்று வருடங்கள் கழிந்தது. இப்போது படுத்த படுக்கையாகிபோனேன். பிள்ளைகள் வலுக்கட்டாயமாக என்னை **சென்னை** அடையார் **கேன்ஸர்** ஆஸ்பத்திரிக்கு அழைத்து சென்றனர். டாக்டர் பரிசோதித்து கேன்ஸர் வியாதி மிகவும் முற்றிவிட்டது. மேலும் இரண்டு புதிய இடங்களில் கேன்ஸர் புற்று தோன்றி இருப்பதால் வைத்தியம் செய்யாமல் அப்படியே விட்டுவிடுவது நல்லது. டாக்டர்கள் என் பிள்ளைகளிடம் இரகசியமாக உங்கள் அம்மாவின் மரணத்திற்கு நீங்கள் ஒப்புகொடுத்து, உங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள் என்று கூறி மாத்திரைகள் கொடுத்து அனுப்பிவிட்டனர். என் பிள்ளைகள் மூவரும் என்னை கேரளாவிலிருந்து வடஇந்தியாவுக்கு பிள்ளைகளின் மேற்பார்வையிலேயே வைத்துக் கொள்ள அழைத்து சென்றுவிட்டனர். உங்கள் ஜாமக்காரனில் குறிப்பிட்ட மார்ச் 14ம் தேதி **உபவாச ஜெபத்துக்கு** நானும் ஜெபகுறிப்பு அனுப்பினேன். **சுகமாகவேண்டும்** என்று கர்த்தரிடம் கேட்டு ஜெபகுறிப்பு எழுதவில்லை. என் **மரணநாள்வரை நான் கர்த்தரிடம் முறு முறுக்காத படி,**கர்த்தரை மறக்காமல் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். உங்கள் ஜாமக்காரனில் வெளியிட்ட பழையகால செய்தியை வாசித்து அவ்வாறு ஜெபிக்க ஆரம்பித்தேன். ஜெயிலில் வேதனையையும், அவமானத்தையும் அனுபவித்த **பவுலும்,சீலாவும்** அந்த **வேதனையிலும் ஸ்தோத்திர பாட்டை** பாடினார்களே! அதை நினைத்தேன். நீங்கள் பல வருடங்களுக்குமுன் எழுதிய பிரசங்கத்தில் **சுகம் கொடுத்தால்தான்** தெய்வமல்ல. சுகம்கொடுக்காமல்போனாலும் அவர் என் தெய்வமாகும். அவர் எனக்காக பட்டபாடுகளை நினைத்து என்னை ஆறுதல்படுத்திக் கொண்டு,அன்று அவர் சிந்திய இரத்தம் என்னை மனந்திரும்பவைத்ததே!அந்த சந்தோஷத்துக்கு ஈடு இணை கிடையாது. அந்த சந்தோஷத்தை இப்போது அனுபவிக்கிறேன். மார்ச்14 அன்று நீங்கள் நடத்திய உங்கள் உபவாச ஜெபத்தில் **என் சுகத்துக்காக** நான் ஜெபகுறிப்பு எழுத வில்லை. **மரணம் நிச்சயம்** என்று அறிவேன். **கடைசி நிமிடம்வரை தேவசமாதானம் என்**

உள்ளத்தில் உண்டாக வேண்டும். சந்தோஷத்தோடு **மரணபயம்இல்லாமல்** என் ஆவியை கர்த்தரிடம் ஒப்புக்கொடுக்கவேண்டும். என் மரணம் மற்றவருக்கு சாட்சியாக இருக்கவேண்டும் என்றுதான் ஜெபித்தேன். எனக்கு **சுகமும் கிடைக்கவில்லை**, சரீரத்தில் **வேதனை அதிகம் உண்டு.** ஆனால் ஆத்துமாவில் சொல்லமுடியாத **சந்தோஷம்.** மரணத்தை ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நிமிடமும் நான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். என் பிள்ளைகளை அழைத்து அவர்கள் என் குடும்ப வீட்டைக்குறித்தும் என் சொத்து ஆகிய விவரங்களைக்கூறி ஆவிக்குரிய ஆலோசனைகளையும் பிள்ளைகளுக்கு கூறி முடித்துவிட்டேன்.

உங்கள் 14ம் தேதி **உபவாச ஜெபத்துக்கு** நன்றி. அது என் **கேன்ஸர்** வியாதியில் என்னை மரணத்துக்கு ஆயத்தப்படுத்த **அந்த ஜெபம்** எனக்கு உதவியது. நான் இறந்தால் கேரளத்தில் என் குடும்ப வீட்டில் என் கணவர் என் பெற்றோரின் கல்லறைக்கு அருகில் என்னை அடக்கம் செய்யவேண்டும் என்று ஒரு ஆசை எனக்கு இருந்தது. உங்கள் ஜாமக்காரனில் அந்த சம்பவத்தை வாசித்தது என் நினைவுக்கு வந்தது, அதில் நீங்கள் எழுதிய உங்கள் சாட்சி இப்போதும் என்னை பெலப்படுத்துகிறது. நீங்கள் **ஜப்பான்** சென்றபோது உங்களுக்கு ஏற்பட்ட அந்த **விமான விபத்தின்** சமயத்தில் கடலுக்குள் விமானம் சென்றுவிடும் என்ற நிலையில் விமானத்தில் இருந்தபடி ஜெபித்தீர்களே. அதை நினைத்தேன்!. எங்கு என்னை **அடக்கம் செய்தாலும்** நான் கர்த்தரின் பாதத்தில் போய் சேருவேன் என்ற உறுதி உங்களைப்போல் எனக்கும் உண்டு. டாக்டர் எனக்காக ஸ்தோத்திரம் செய்வீர்களா? நான் மரித்தால் என் மரண விவரத்தை என் பிள்ளைகள் கண்டிப்பாக உங்களுக்கு அறிவிப்பார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

இதை வாசிக்கும் வாசகர்களே. மேலே வாசித்த இரண்டு விதமான சாட்சிகள் உங்கள் ஆத்துமாவை பெலப்படுத்தட்டும். **சாத்ராக், மேஷாக், ஆபத்நேகோ** கூறியபடி கர்த்தர் எங்களை விடுவிக்க வல்லவர்,அப்படி விடுவிக்காமல்போனாலும் என்று கூறி தாங்கள் தெய்வத்தின்மேல் வைத்த விசுவாசத்தை வெளிப்படுத்தினார்களே. அதேபோல் வாசகர்களும் உண்மையான கர்த்தருடைய பிள்ளைகளாக நீங்கள் யாவரும் விசுவாசத்தில் வளரவேண்டும். சோர்ந்து போக வேண்டாம். நாம் தேவன் நல்லவர்.

உங்களுக்காக நான் தொடர்ந்து ஜெபிக்கிறேன். பரீட்சை எழுதிய 10,12வது பிள்ளை களுக்காக ஜெபிக்கிறேன். ஜூன் மாதம் புதிய வகுப்புக்கு பிரவேசிக்கும் பிள்ளைகளுக்காக ஜெபிக்கிறேன்.

வேலைக்காக விண்ணப்பித்தவர்களுக்காகவும்,தங்கள் பிள்ளைகளின் திருமணத்திற்காக ஜெபிக்க கேட்ட பெற்றோர்களுக்காகவும், அவர்கள் அனுப்பிய இமெயில் செய்திக்காகவும், தொலைபேசியில் கூறிய ஜெப குறிப்புகளுக்காகவும் தொடர்ந்து ஜெபிப்பேன்.

## மழைக்காக ஜெபம்:

■ தண்ணீருக்காக மக்கள் பல ஊர்களில்(தமிழ்நாட்டில்) காலிகுடங்களோடு அலையும் நிலைகளை அறிந்து என் மனைவி மழைக்கு வேண்டி விசேஷ ஜெபகுறிப்பாக நம் ஜாமக்காரன் **வாசகர்களை ஜெபிக்க கேட்டுக்கொள்ளுங்கள்** என்று ஞாபகப்படுத்தினார். **மழைக்காக**

ஒவ்வொரு நாளும் நாம் ஜெபிக்கவேண்டும் என்று வாசகர்களுக்கு வேண்டுகிறேன். ஆம். அநேக இடங்களில் மக்கள் தண்ணீருக்காக படும்பாடுகள் மிக பரிதாபம். கர்நாடகாவில் நமக்கு தண்ணீர் கொடுக்கவில்லை என்று நமக்கு ஒரு குறை உண்டு. ஆனால் கர்நாடகாவிலும் ஏராளமான இடங்களில் நம்மைபோல் தண்ணீருக்காக தவிக்கிறதை டிவியில் கண்டேன்.

உலக ஆராய்ச்சியாளர்கள் கூறுவதுபோல தண்ணீர் பிரச்சனை உலகமெங்கும் உண்டாகபோகிறது. பல இடங்களில் தண்ணீருக்காகவே யுத்தம் மூளும் நிலை உள்ளது என்று எழுதியுள்ளார்கள். ஆகவே விசுவாசிகள் தண்ணீருக்காக தினசரி ஜெபங்களில் ஜெபிக்க கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக தேசத்தின் தலைவருக்காக, தேசத்தின் சமாதானத்திற்காக தினமும் மறவாமல் பாரத்துடன் ஜெபிக்கவும். உண்மையான பாரமான ஜெபம்மூலம் நிச்சயம் கர்த்தரின் கண்களில் இரக்கம் கிடைக்கும்.

**கர்த்தர் நம் தேசத்தின் மீது இறங்குவாராக. ஜெபிப்போம். ஜெயம் பெறுவோம்.**

கர்த்தரின் பணியில்

**டாக்டர்.புஷ்பராஜ்**

# Why are Divorce Rates Going up among Christians?

**Selected**

**A Nagative view:**

1. One who is born in a Christian home.
2. One who has been baptised or received into a chruch for social gathering with all its rites an rituals.
3. One who shows up on special occasions like marriage,death, festivals etc.

**A Postive view:**

1. One who belongs to a God - fearing family
2. One who has received Jesus Christ as his/her personal Saviour and Lord.
3. One who reflects the purpose and meaning of being a Christian.

Some of the reasons why divorce cases are going up among Christians:

1. Constant fights caused by wrong attitude,bed nature of either or both the spouses, misinformation spread by gossip, and so on.
2. Lack fo seriousness to consider ways that will help resolve their differences.
3. Impotence or inability to conveive.
4. Lack of communication resulting in strained relationship
5. Failure to consult God about their problems and asking Him to intervene.
6. Lack of humility and submission to the lordship of Jesus Christ who alone can restore and strengthen their marriage bonds

# என் இலங்கை ஊழிய பயணம்








**இலங்கையின் தலைநகர் கொளும்புவில்** GALLE FACE என்ற இடத்தில் CHRIST CHURCHல் நடந்த கூட்டங்கள் மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது.

யாழ்பாணம்,கெண்டி,திரிகோணமலை,நுவரேலியா போன்ற நகரங்களிலிருந்து என் வாசகர்களும், ஊழியர்களும் திரளாய் வந்து கூட்டங்களில் பங்கெடுத்தார்கள். வாசகர்களை நேரில் கண்டதில் பெரும் சந்தோஷம். என் குடும்பத்தினரை நேரில் கண்டதுபோல் இருந்தது. பகலில் காலை முதல் மாலை 3-30 வரை மக்கள் இரண்டு நாட்கள் திரண்டு வந்து ஆவிக்குரிய கேள்விகள் கேட்டதும்,ஆலோசனைகள் பெற்றதும், ஜெபித்ததும் ஆசீர்வாதமாக அமைந்தது. **Back to the Bible** ஸ்தாபனத்தினர் தங்கள் ஆவிக்குரிய புஸ்தகங்களை சிடி,டிவிடி ஆகியவைகளை கொண்டுவந்து மக்களுக்கு அறிமுகப்படுத்தினர்கள். நானும் என் பிரசங்கத்தில் சத்தியவசன தினசரி தியான புத்தகம் வாங்கி பயன்பெற கூட்டத்தில் கேட்டுக்கொண்டேன். ☐ நான் அங்கு தங்கிய நாட்களில் இலங்கை முழுவதும் டெங்கு காய்ச்சலாலும், பன்றி காய்ச்சலாலும் 1000 கணக்கில் மக்கள் பாதிக்கப்பட்டனர், ஊழியர்கள், ஆயர்கள் பலர் அதில் பாதிக்கப்பட்டனர்.

Christ Church தலைமை Vicar F.Charles Gnaniya, உதவி ஆயர், சபை வார்டன் யாவரும் கூட்ட ஏற்பாடுகளை மிக அருமையாக செய்திருந்தனர். என்னை அவர்களும் சபை மக்களும் மிகவும் நேசித்து உபசரித்தது என்னை நெகிழச்செய்தது. கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

# கேள்வி - பதில்

**கேள்வி:** நான் பாரம்பரிய கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்த தற்போது ஒரு கிறிஸ்தவ சபையில் அங்கத்தினராகவும் உள்ளேன். எங்களது சபையில் போதிக்கப்படும் விஷயங்களுக்கும் வேத புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள விஷயங்களுக்கும் ஏராளமான கருத்து வேறுபாடுகள் உள்ளன. எனவே நான் நீங்கள் சார்ந்துள்ள சபை எது என்று அறிந்தால் அதில் ஐக்கியம் வைத்துக்கொள்ள விரும்புகிறேன்.

**பதில் :** **"பிதாவே"** வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே இவைகளை நீர் ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். ஆம் பிதாவே இப்படிச் செய்வது உம்முடைய திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது". லூக் 10:21

கிறிஸ்து இயேசுவுக்குள் அன்பான சகோதரர் அவர்களுக்கு.

வெளி 4:11ன் படி தேவன் ஒருவரே எல்லா மகிமையையும் பெற்றுக்கொள்ள தகுதியுடையவர். ஏனெனில் அவரே மறைபொருள்களையும் தேவனுடைய சத்தியங்களையும் **பரிசுத்த ஆவியினால்** வெளிப்படுத்துகிறவர் ( 1 கொரி. 2:10-12, 2 கொரி 3:5, 4:7)

எந்த சபையில் ஐக்கியம் வைத்துள்ளோம் என்பதைக் குறித்துக் கவலைப்படாமல் தற்போது இருக்கிற சபையில் தொடர்ந்து இருக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் எந்த சபையைச் சார்ந்தவர்கள் என்பதைவிட நாங்கள் விசுவாசிக்கிற பைபிள் போதனைகளும் சத்தியங்களும் பைபிள் அடிப்படையில் உண்மையா? என்பதை நீங்கள் தெளிவுபடுத்திக்கொண்டு அதை முதலில் உங்கள் வாழ்க்கையில் கடைபிடிக்கவேண்டுகிறேன்.

பைபிள் சத்தியங்களையும்,போதனைகளையும் தெளிவாகவும், சரியாகவும் புரிந்துக்கொண்டு தெய்வம் விரும்புகிற விதமாக வாழ்ந்து அதை பிறருக்கும் அறிவிப்பதன் மூலம் தேவ ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே எங்களுடைய விருப்பம்.

"காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து ,அவர் கற்பனைகளைக் கைக்கொள்ள எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே." பிர. 12:13 தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றவே நாம் படைக்கப்பட்டுள்ளோம்.

நம்முடைய சுயசித்தத்தை நிறைவேற்ற நாம் சார்ந்திருக்ககூடாது. நம்முடைய சித்தம் அல்ல: தேவனுடைய சித்தம் நம்மில் செயல்பட நாம் அனுமதிக்க வேண்டும். நாம் கிறிஸ்தவ சபையில் அங்கத்தினராக இருக்கவேண்டும் என்பதற்காக அழைக்கப்பட்டுள்ளோம். நம்முடைய சொந்த விருப்பத்தின்படி சபையைவிட்டு பிரிந்துசெல்வது சரியானது அல்ல. நாம் சார்ந்திருக்க

கூடிய சபையானது வேத வசன அடிப்படை கிறிஸ்தவ போதனைகளுக்கு எதிராக இருந்தால் அந்த சபையை விட்டு கிறிஸ்துவே நம்மை வெளியேற்றி சரியான பாதையில் நம்மை நடத்த வல்லவராயிருக்கிறார். நாம் தேவனை அறிகிற அறிவில் வளர்வது சபையை விட்டுவெளியேறி அல்ல. சபையை பாதுகாக்கவே என்பதை நினைவில் கொள்ளவேண்டும். நம்முடைய சத்திய அறிவு நம்மில் மனத்தாழ்மையை வளர்க்கவேண்டும். பிறரை குற்றம் காண்பதற்காக தேவன் நமக்கு ஞானத்தை தரவில்லை. பிறருக்கு உதவவே அதை பயன்படுத்தவேண்டும். நம் அறிவின் நிமித்தம் நம்முடைய சக சகோதர்கள் இடறலடையாமல் அல்லது மேட்டின்மையான எண்ணங்களோ வராமல் பார்த்துக்கொள்ளுதல் வேண்டும். தேவனுடைய ஞானம் நம்மை சபையில் ஐக்கியத்தை பாதுகாக்கவும் சகோதரர்களுக்குள் அன்பையும் ஒற்றுமையையும் வளர்க்கவும் நம்மை தூண்ட வேண்டும். ஒரே குடும்பமாக கூட்டி சேர்க்கபட்ட சபையில் கருத்துவேறுபாடுகள் இருப்பது சாதாரண விஷயம்தான் அதன் காரணமாகவே அப் பவுல் 1 கொரி 1:10,12ல் கீழ்காணும் ஆலோசனையைக் கொடுத்துள்ளார்.

"சகோதரரே. நீங்கள்ளெல்லாரும் ஒரே காரியத்தை பேசவும் பிரிவினைகளில்லாமல் ஏனமனதும் ஏக யோசனையும் உள்ளவர்களாய்ச் சீர் பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லலுகிறேன்".

உங்களில் சிலர் நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும், நான் கேபாவைச் சேர்ந்தவனென்றும், நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால் நான் இப்படிச் சொல்லுகிறேன். 1 கொரி 1:12

ஆரம்பகால கிறிஸ்தவ சபையில் காணப்பட்ட பிரிவினைகள் இன்றும் காணப்படுகின்றன. அதைப்போலவே நம்மில் இன்றும் சிலர் போப்பை சேர்ந்தவனென்றும்(ஆர். சி.) பிஷப்பை சேர்ந்தவனென்றும் (புரட்டஸ்டண்டு) நான் தனிப்பட்ட ஒரு போதகரை சேர்ந்தவனென்றும் நான் பெந்தேகோஸ்தே சபையை சேர்ந்தவனென்றும் , நான் கிறிஸ்துவை சேர்ந்தவனென்றும் சொல்லிக்கொள்கிறார்கள். இது தவறான அணுகுமுறையாகும் சபையின் அடிப்படையில் நாம் நம்மை மேன்மைபாராட்ட இடமில்லை (கலா. 6:4) கிறிஸ்தவ சபைகள் நல்ல நோக்கத்தில் தேவனுடைய சித்தத்தை செய்வதற்கே ஆரம்பிக்கப்பட்டுகின்றன. நாளடைவில் உறுப்பினர்களின் எண்ணிக்கை பெருகும்போது (சபையில் தெளிவான போதனைகளை கொடுப்பதைவிட யார் முன்னிலை வகிப்பது? யார் போதிப்பது? சபையை எப்படி கட்டிகாப்பது? சபையை எப்படி உற்சாகப்படுத்துவது? அதை எப்படி விரிவாக்குவது? என்றே தங்கள் நேரத்தை செலவிடுவதால் அதனுடைய தரம் குறைய ஆரம்பிக்கிறது. பின்பு சபையானது கிறிஸ்தவ அங்கத்தின் அடையாளத்தை விட ஒரு தனிப்பட்ட ஸ்தாபனத்தின் அடையாளங்களோடு (அந்த சபைக்கென்று புதிய சட்டதிட்டங்களோடு) செயல்பட ஆரம்பிக்கிறது. ஒரு சபையின் தரம் எத்தனை விசுவாசிகளையும், ஊழியர்களையும், கிறிஸ்துவுக்காக உருவாக்கியுள்ளது என்பதில் பேரில் மட்டுமே இருக்கவேண்டும். எனவே நாம் நன்கு பயிற்றுவிக்கப்பட்டவர்களாக சபைகள் இல்லாத பிராந்தியத்தில் கிளைசபையை நிறுவுவதற்காக. முன் அனுமதிபெற்று பிரிந்துசெல்லாம் அல்லது எண்ணிக்கை பெருகுவதால் புதிய கிளை சபையை தொடங்கவேண்டிய கட்டாயம் ஏற்படலாம். இதைத்தவிர தனிப்பட்ட நபர்கள் சபையில் இருந்து கருத்து வேறுபாடுகளின் அடிப்படையில் பிரிவது தேவனுடைய சித்தத்திற்கு எதிராக செயல்படுவதாகும்.

எனவே எங்களது ஆலோசனைகள் உங்களை தற்போதுள்ள சபையில் இருந்து பிரிப்பதற்காக அல்ல. உங்கள் கிறிஸ்தவ ஐக்கியத்தை பலப்படுத்துவதற்காகவும். சத்தியங்களையும் போதனைகளையும் சரியாக புரிந்துகொண்டு செயல்படவேண்டும் என்பதற்காகவும் கொடுக்கப்பட்டு உள்ளன என்பதை நினைவில்கொள்ளுங்கள்.

# சபைகள் - ஒரு கண்ணோட்டம்

பைபிளில் இஸ்ரவேலர் சபை - கிறிஸ்துவின் சபை என்ற இரண்டு சபைகள் மட்டுமே செய்யப்பட்டுள்ளது சபை (Assembly of Congruation) என்ற வார்த்தை முதன்முதலாக யாத் 12:4ல் தான் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனாலும் இன்று கிறிஸ்தவர்கள் மத்தியில் சுமார் 1000க்கும் அதிகமான சபை பிரிவுகள் உள்ளன. கோடிக்கணக்கனோர் கிறிஸ்தவ சபைகளின் பாகமாக உள்ளனர். சபைகள் பெரிய கட்டிடங்களில் மட்டுமின்றி சிறுசிறு குழுக்களாக வீடுகளிலேயும் செயல்படுகின்றனர். எல்லா சபைகளிலும் நிறைகளும் குறைகளும் உண்டு. நாம் ஒவ்வொரு சபையாக ஆராய்ந்து பரிபூரண சபையை தேர்ந்தெடுப்பது என்பது முடியாத காரியம். நாம் சார்ந்திருக்கும் சபையின் அடிப்படையில் நாம் நியாயந்தீர்க்கப்பட போவதில்லை. நம்முடைய செய்கைகளுக்கு தக்கவாறே நாம் நியாந்தீர்க்கப்படுவோம் என்பதை புரிந்துகொள்ளவேண்டும். (பிர. 12:14. ரோ. 14:12 கலா 6:5 எபி .4:13 வெளி 21:10,11 22:11,12)

## 1 இஸ்ரவேலர் சபை

இஸ்ரவேலர்கள் தேவனுடைய ஜனமாக இருப்பதால் சபையால் என்ற வார்த்தை பயன்படுத்தப்படடது. தேவனுடைய இந்த சபைக்கு கொடுக்கப்பட்ட தேவனுடைய வார்த்தைகளும் அதற்கு சபையார் அளித்த பதிலும் யாத் 19:3ல் தெளிவாக பதவுசெய்யப்பட்டுள்ளது. ஆனாலும் இஸ்ரவேலர்கள் உடன்படிக்கையையும் மீறி தேவனுடைய வார்த்தையில் விசுவாசம் வைக்காமலும் தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்படியாமலும் போனார்கள் என்பதை நாம் அறிந்துள்ளோம் பிதாவாகிய தேவனால் பரிசுத்தமாக்கப்படும் அவரால் அனுப்பபட்டவருமாகிய இயேசு கிறிஸ்துவை மேசியாவாகவும், தேவனுடைய குமாரனாகவும் ஏற்றுக்கொள்ளாமல் அவரைக் கொலை செய்தார்கள் (உபா. 18:15, யொ. 8:42. 10: 36-40. 11:47-53) மத் 21:33-41, 22:2-9, 23:37ன்படி இஸ்ரவேலர்கள் தேவனுடைய சபையார் என்ற தகுதியை வசனத்தை ஏற்றுக்கொண்டார்கள் (அப். 13:46-52) யோ. 8:30-31 மற்றும் அப் 11:26ன் படி முதல் நூற்றாண்டில் இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து அவரது போதனைகளை ஏற்று அதற்கு கீழ்படிபவர்கள் அதாவது இஸ்ரவேலர்கள் மற்றும் புறஜாதியார்கள் உட்பட அனைவரும் கிறிஸ்தவர்கள் என அழைக்கப்பட்டார்கள்.

## 2. கிறிஸ்தவ சபை

கி.பி. 33, பொந்கோஸ்தே நாளில் தான் முதல் கிறிஸ்தவ சபை உருவானது. (அப் 2:41) கிறிஸ்தவ சபைக்கு இயேசுகிறிஸ்து தலையாக இருக்கிறார். (வெளி. 1:13,20 1 கொரி. 11:3ன்படி கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக்கிறார். அப் பவுல் எபே. 5:23-32ல் கிறிஸ்துவையும் சபையையும் கணவன் -மனைவிக்கு ஒப்பிட்டு சபை, கிறிஸ்துவுக்கு கீழ்பட்டிருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார். அதே நேரத்தில் சபையில் மார்க்கபேதங்கள் இருக்கலாம் பிரிவினைகள் இருக்ககூடாது என தெளிவானபோதனையும் வழங்கியுள்ளார். (1 கொரி 1:10-12 11:18:19) மஜதல் நூற்றாண்டில் விருத்தசேதனம் செய்வது சம்மந்தமாக வாக்குவாதமும்

தர்க்கமும் வந்தபோது இந்தபிரச்சனை எருசலேமில் உள்ள அப்போஸ்தலர்களும் மூப்பர்களும் உள்ள ஆலோசனை குழுவில் ஆராய்ந்து முடிவு எடுக்கப்பட்டு அது எல்லா சபையிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்ற பதிவு அப் 15:1-31ல் உள்ளது. அப்போஸ்தலர்களின் மறைவிக்குப்பின் குறிப்பாக கி.மு. 70ல் எருசலேம் அழிக்கப்பட்டு கிறிஸ்தவர்கள் சிதறடிக்கப்ட்டபின் பைளை சத்தியங்கள் மற்றும் போதனைகள் குறித்த விவாதங்கள் பைபிள் அடிப்படையில் குழுவாக கலந்து பேசி ஒருமனதாக தீர்மானம் செய்யாமல் தனிப்பட்டநபர்களின் செல்வாக்கு அடிப்படையிலும் மனித பயத்தின் அடிப்படையிலும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டதால் சபையில் பிரிவனைகள் பெரக துவங்கினது. முதல் நூற்றாண்டின் இறுதியில் அப் யோவானுக்கு வெளிப்படுத்தப்பட்ட தரிசனத்தில் ஏழு சபைகளின் மத்தியில் சபையின் தலைவராக இயேசுகிறிஸ்து இருப்பதாக வெளி. 1:11- 13:20ல் வாசிக்கிறோம். வெளி 2 மற்றும் 3ம் அதிகாரங்களில் ஏழு சபைகளின் வித்தியாசப்பட்ட கிரியைகளைக் குறித்து எச்சரிப்பும் மனந்திரும்பும்படியாக ஆலோசனையும் கொடுக்கப்பட்டுள்ளது. (வெளி. 2:3, 5, 9, 13, 16, 19,21-23, 3:1,3,8,15,16,19) அந்த சபைகளில் காணப்பட்ட நிலைமைகள் இன்று நம்முடைய காலப்பகுதியில் உள்ள சபைகளில் உள்ளதை யாரும் மறுக்கமுடியாது. ஏழு என்ற பைபிளில் முழுமையை (பரிபூரணத்தை) குறிக்க பயன்படுத்தப்படுவதால் இன்று உலகில் உள்ள மொத்த கிறிஸ்தவ சபைகளும் இந்த ஏழு சபைகளில் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது அந்த ஏழு சபைகள் நம்முடைய நாட்களில் உள்ள எல்லா சபைகளுக்கும் முன்நிழலாக உள்ளன. எனவே நாம் நம்முடைய சபை போதனைகளையும்ஈ கிரியைகளையும் சுய பரிசோதனை செய்து ஆராய்ந்து பார்த்து நாம் வெளிப்படுத்துதலில் பதவி செய்யப்பட்டுள்ள ஏழுசபைகளில் எந்த சபையின் பாகமாக உள்ளோம் என்பதை கண்டறிந்து அதற்கான கிறிஸ்துவின் எச்சரிப்புகளையும் ஆலோசனைகளையும் பின்பற்ற வேண்டும்.

மற்றொரு விதமாக அந்த ஏழு சபைகள் ஏழு காலங்களில் உள்ள சபையை குறிப்பாக கருத்தில் கொண்டால் நாம் தற்போது ஏழாவது சபையின் காலத்தில் குளிரும் இல்லாமல் அனலும் இல்லாமல் இருப்பதை காணமுடியும். இந்த காலகட்டத்தில் வெளி 3:20ன்படி "வாசற்படியில் நின்று தட்டுகிறேன்" என்ற பதத்தை கிறிஸ்து பயன்படுத்ததுவதன் மூலம் வெளி 1:12,13ல் சபைகளின் மத்தியில் உலாவி வந்த கிறிஸ்து தற்போது வெளியே நிற்பதாக காட்டுகிறார். இதன் மூலம் தனிப்பட்ட நபர்களாக அல்லது சபைகளாக கிறிஸ்துவின் போதனைகளை கேட்கவிரும்புவோர், தங்களுக்கு கற்பிக்கப்பட்ட பாரம்பரிய போதனைகளாகிய கதவுகளை திறந்து கிறிஸ்துவின் போதனையை கேட்கவேண்டும் என்பதை அறிவுறுத்துகிறார். வாசற்படியில் நிற்பது அவரது வருகை மிகசமீபம் என்பதையும் தட்டுகிறார் என்பது ஒருவர் கதவை திறப்பதுபோல நாம் முடிவின் காலப்பகுதியில் தேவசித்தத்தை செய்ய விரைவாகவும் உற்சாகமாகவும் செயல்பட வேண்டும் என்பதையும் அறிவுறுத்துகிறது. எபி. 10:24,25ன்படி சகோதர சிநேகம் மற்றும் கிறிஸ்தவ ஐக்கியம் காரணமாக சபைக்கு செல்லவேண்டியது அவசியமாகும். ஆனால் சபை போதனைகளை அப் 17:11ன்படி பைபிள் அடிப்படையில் ஆராய்ந்து,பைபிள் சத்தியங்களுக்கும் போதனைகளுக்கும் மட்டுமே கீழ்படிய வேண்டும். தனிப்பட்ட விதமாக கிறிஸ்தவ சபையில் உள்ளவர்கள், இயேசுகிறிஸ்துவின் போதனைக்கு செவிகொடுத்து கீழ்ப்படிந்தால் நிச்சயம் ஜெயம் கொள்கிறவர்களாக தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்பதில் சந்தேகம் ஏதுமில்லை.(வெளி 2:7, 11, 17, 26-29, 3:5,6,12, 13, 22)

வெளி 1:11-3:19ல் உள்ள வேத வசனங்களை இப்பரிசுத்த ஆவியின் உதவியோடு ஆராய்ந்து பார்க்கும்போது சில உண்மைகளை புரிந்துகொள்ளமுடிகிறது. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏழு சபைகள் நம்முடைய காலங்களில் செயல்படும் ஏழு முக்கிய சபைகளுக்கு முன்நிழலாக உள்ளது.

1. **எபேசு சபை** (வெளி 2:-7) கி.பி. 33 முதல் 100 வரை (அப்போஸ்தலர்கள் காலம்)

2 **சிமினா சபை** (வெளி 2:8,11) கி.பி. 1-1-315 (உபத்திரவ காலம்)

3. **பொகமு சபை** (வெளி 2:12-17) கி.பி. 316-590 வரை (ரோம சபை)

4. **தியத்தீராசபை** (வெளி 2:18 -20) கி. பி. 591 -1516 வரை (இருண்டகாலம் கத்தோலிக்க சபை)

5. **சாதை சபை** (வெளி 3:1-6) கி.பி. 1617-1700 வரை (புரட்டஸ்டண்டுகள் காலம்)

6. **பிலதெல்பியா சபை** (வெளி 3:7-13) கி.பி. 17ம் மற்றஜம் 18ம் நூற்றாண: (பெந்தகோஸ்தே சபை)

7. **லவோதிக்கேயா சபை** (வெளி 3:14-19) 19ம் நூற்றாண்டு முதல் (சகோ ரஸல் அவர்களால் உரவாக்கப்பட்ட சபை)

நான்காவது சபையான தியத்தீரா துவங்கி மீதமுள்ள மூன்று சபைகளும் சரித்திர ரீதியாக பார்ப்போமானால் ஆண்டவருடைய வருகைவரை உலகில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் முந்தின மூன்று சபைளுக்கும் மனந்திரும்பும்படியாக ஆலோசனை சொன்ன இயேசு இந்த தியத்தீர சபைக்கு அந்த ஆலோசனை வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனாலும் வெளி 2:23-25ல் தியத்தீர சபையிலும் கிறிஸ்து தன்கென்று சில நபர்கள் தெரிந்துகொள்கிறார்கள். யேசபேலின் வஞ்சனையான போதகத்தை (திரத்துவம், மரியாள் வழிபாடு, உருவவழிபாடு) பற்றிக்கொள்ளாத சில ஆத்துமாக்கள் தியத்தீரா சபையில் இருப்பதைக் தேவன் கண்டுகொள்கிறார். சபைக்கென்ற எந்த ஆலோசனையும் வாக்குதத்தையும் கொடுக்காத இயேசு. இந்த சபையில் அங்கம் வகித்துக்கொண்டு அதே நேரத்தில் அதின் தவறான போதகத்தை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கு அவர் மேற்கொண்டு வேறு எந்த பாரத்தையும் சுமத்த மாட்டேன் என்று வாக்குபண்ணகிறார். எனவே நாம் சார்ந்துள்ள சபையின் பொதனைகளின் அடிப்படையில் நம்மை கிறஸ்து பார்ப்பதில்லை நம்முடைய இருதயத்தையே பார்க்கிறார் என்பதற்கு இதைவிட சிறந்த உதாரணம் இல்லை (ரோ. 2:6) "உங்களுக்குள்ளதை நான் வருமளவும் பற்றிக்கொண்டிருங்கள்" என்று சொல்வதன் மூலம் சபையை விட்டு வெளியே வரும்படி ஆலோசனை கொடுக்காமல் அவர் வருகை வரை ஆயத்தத்தோடு காத்திருக்கும்படி சொல்கிறார்.

மேலும் இந்த சபைக்கு கிறிஸ்து தன்னை பிதாவாகிய தேவனுக்கு இணையாக்காமல் திரியேகதேவன் மரியாளின் மகன் என்று தன்னை அறிமுகப்படுத்தாமல் பூமியில் இருக்கும் போது மட்டுமல்ல பரலோகத்திலும் தான் தேவனுடைய குமாரன் என்று தன்னை அறிமுகப்படுத்துகிறார்(வெளி 3:18) வெளி 3:21ன்படி மனந்திரும்பும்படி தவணை கொடுத்திருப்பது என்பது அவர்கள் அந்த திரித்துவ மற்றும் உருவ வழிபாடு கோட்பாட்டிலிருந்து இன்றளவும் மனந்திரும்பாமல் இருப்பதையே காட்டுகிறது. வசனம் 22:23ல் சொல்லப்பட்டுள்ள

பிள்ளைகள் என்ற வார்த்தை இந்த சபையில் இருந்து பிரிந்து அன்று செல்லப்பட்டவரும் திரித்துவ போதனையை அடிப்படையாக கொண்ட எல்லா சபைகளையும் குறிப்பதாக சொல்லலாம். இந்த சபையினரை மிகுந்த உபத்திரவத்தில் தள்ளுவேன் என்பது அவர்கள் மிகுந்த உபத்திரவ காலத்தில் புடமிடப்படுவார்கள் என்பதை அடையாளம் காட்டுகிறது (வெளி. 2:22)

படிப்படியாக கிறிஸ்தவ சபையானது கிறிஸ்துவின் தலைமையில் பல்வேறு காலகட்டங்களில் வாழ்ந்தோரால் வளர்ச்சியடைந்துள்ளது. குழந்தைத்தனமான கருத்துக்களில் இருந்த சபையானது இன்று நல்ல முதிர்ச்சியை நோக்கி வளர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ரோமன் கத்தோலிக்க நிர்வாகம் மூடிமறைக்க வேண்டும் என்று விரும்பிய சத்தியத்தின் ஆதராத்திற்கு எதிராக ஜான்விக்ளிப் என்பவர் குருமார்களுக்கெதிரான துண்டுப்பிரசுரங்களை எழுதி வெளியிடதொடங்கினால். ஆனாலும் அவர்களுடன் வாக்குவாதம் செய்கின்ற மாதிரி அவர் எழுதாமல் மனிதர்களின் எண்ணங்களை வேதாமத்தின் போதனைகளுக்கும் இதன் ஆசிரியரித்திற்கும் அழைக்கும்படியாக செயல்பட்டார். மற்றொரு நபரான ஜான்ஹஸ் என்பவர் ரோம கத்தோலிக்ககர்கள் போதித்த பிடிவாதமான கோட்பாடுகளையும் அவர்கள் நடைமுறைப் படுத்தியிருந்த வெறுக்கதக்கதான செயல்களையும் கண்டித்தார். மேலும் இங்கிலாந்தில் **விக்ளிபின்** போதனைகளை ஏற்றுக்கொண்டு ஜெரோம் என்பவர் ஹஸ்ஸின் சீர்திருத்த பணியில் இணைந்தார் ஹஸ் கத்தோலிக்க பேராயர்கள் அடங்கிய ஆலோசனைக்குழு மூலம் தீக்கரையாக்கப்பட்டு இரத்த சாட்சியானார். ஹஸ்ஸின் உடல் எரிந்து சாம்பலானது, அவரை அழித்ததன் மூலம் அவர் பிசங்கித்த சத்தியத்தை வேரோடு பிடுங்கிவிட்டதாக அவரை உபத்திரவபடுத்தினார்கள். வீணாக கற்பனை செய்துகொண்டார்கள் . ஆனால் அன்று கடலில் கலந்த அவருடைய சாம்பல்கள் விதைகளாக மாறி அறியப்படடாத நாடுகளில்கூட சத்தியத்தின் சாட்சிகளாக கனிகளை கொடுக்கும் என கனவிலும் அவர்கள் நினைக்கவில்லை. அதன்பின் ஜெரோம் எரித்துக்கொல்லப்பட்டார். இவர்களுக்குபின் ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தின் இருளிலிருந்து சபையைத் துாய்மையான விசுவாசம் என்னும் வெளிச்சத்திற்குள் அழைத்தவர்களில் மிக முன்னணியில் நின்றவர் **மார்டின் லூத்தர்.** அதன்பின் சுவிட்சர்லாந்தில் ஸ்விங்ளி வெஸ்லி என்பவர்களும் இன்னும் அநேக சீர்திருத்தவாதிகளும் சீர்திருத்த கருத்துக்களுடன் சபையை பாதுகாத்தனர். முடிவில் 18ம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த ரசல் என்பவர் உருவாக்கிய சபையானது திரித்துவ போதனையை வேத வெளிச்சத்தில் ஆராய்ந்து சத்திய வெளிச்சங்களை தெளிவாக பிரகாசிக்க செய்தனர் என்றும் அவரது **யேகோவா** என்றும் **கிறிஸ்து தேவனுடைய குமாரன்** என்றும் **பரிசுத்தஆவி** தேவனுடைய வல்லமை என்றும் பைபிள் அடிப்படையில் திருத்தமாகவும் தெளிவாகவும் அறிவித்தனர்.

இந்த சீர்திருத்தமே கடைசியானதாக இருப்பதால் இதுவே ஏழாவது சபையாக விளக்கப்படுகிறது. ஆனாலும் எசேக் 18:4 மற்றும் 1 யோ. 4:8 ன் அடிப்படையில் அழியாத **ஆத்துமா எரிநரகம்** போன்ற பைபிள் சத்தியங்களை அவர்கள் ஏற்க மறுக்கிறார்கள். சங் 16:10, 2 தெச 1:5,6 மத் 10:28ன் வேத வசனங்களுக்கு தெளிவற்ற விளக்கங்களை கொடுத்து வருகிறார்கள். அதனடிப்படையில் பார்த்தால் எத்தனைதான் சீர்திருத்த கருத்துகள் வந்தாலும் இன்னும் நாம் அறிய வேண்டிய சத்தியங்கள் அநேகம் இருக்கின்றன. ஏழு சபைகளில் எவ்விதமாக வித்தியாசப்பட்ட குறைகள் காணப்பட்டதோ அவ்விதமான குறைகள் இன்றும் நம்முடைய எல்லா சபைகளிலும் உண்டு என்பதை ஒத்துக்கொள்ளவேண்டும். சபையில் நாம் திருத்தமாகவும் தெளிவாகவும் அறிந்திருக்கிறோமென்று எண்ணினால் நாம் அறியவேண்டிய பிரகாரமாக அதை

அறியவில்லை என்றே வேதவசனம் கூறுகிறது. (1கொரி 8:2) இதற்காகவே 1 தெச 5:21,22ல் தெளிவான ஆலோசனை கொடுக்கப்பட்டுள்ளது என்பதை புரிந்துகொள்ளவேண்டும். (அப் 17:11)

## 3 சபையின் செயல்பாடுகள்

எநத் ஒரு சபையையும் நாம் நியாந்தீர்க்க கூடாது. ஏனெனில் கிறிஸ்து சபைக்கு தலைவராய் இருப்பதால் அவரே அதை செய்ய வல்லவர். தியந்தீரா சபையில் எப்படி கிறிஸ்துவுக்கென்று இன்றும் கிறிஸ்துவுக்கென்று சிலர் இருக்கிறார்கள். அவர்கள் யார் என்பதை அவர்களுடைய சிந்தனை சொல் மற்றும் செயல்கள் மூலம் அறிந்துகொள்ளமுடியும். நம்முடைய யுத்தம் மாம்சத்தோடும் ரத்தத்தோடும் அல்ல என்பதை தெளிவாக புரிந்துகொண்டு சத்துருக்களையும் சிநேகிக்க வேண்டும் என்ற போதனையின்படி மற்ற கிறிஸ்தவ சபையை சேர்ந்தவர்களை நாம் மதிக்க கற்றுக்கொள்ளவேண்டும்

அவர்களை பகைப்பதும் தூஷிப்பதும் அல்லது கருத்துக்களை தவறாக திரித்து கூறுவதும் கண்டிக்கத்தக்கது. கிறிஸ்து நம்மை காணும் விதமாக நாம் பிறரை காண வேண்டும். எந்த ஒரு தனிப்பட்ட நபரையும் அவர் சார்ந்திருக்ககூடிய சபையை அடிப்படையாககொண்டு நியாயந்தீர்க்க கூடாது. நாம் எந்த சபையை சேர்ந்தவர்கள் என்ற அடையாளத்தைவிட அன்பை அடையாளமாக கொண்ட கிறிஸ்தவர்களாக இருப்பதுதான் நியாயமானது. யோ. 13:34, 35

சபையில் உள்ள மூப்பர்களும் கண்காணிகளும் விசுவாசிகள் கேட்கின்ற கேள்விகளுக்கு சரியான பதிலை பைபிள் அடிப்படையில் போதிக்க வேண்டும். அவர்களுடைய கேள்விகளை அற்பமாக எண்ணி அலட்சியம் செய்ய கூடாது. மார்க்க சம்பந்தமாக கேட்கப்படும் கேள்விகளுக்கும் பைபிள் அடிப்படையில் தெளிவாக புரிந்துகொள்ளும் விதமாக போதிக்க வேண்டும். அத்தகைய போதிக்கும் வரத்தை பரிசுத்தஆவியின் உதவிக்காக ஜெபித்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

கருத்து வேறுபாடு காரணமாக பிரச்சனை ஏற்பட்டால் அப் 15ம் அதிகாரத்தில் உள்ள ஆலோசனையை பின்பற்றி வேத வசனங்கள் அடிப்படையில் சபையில் உள்ள ஆலோசனை குழுவினர் அந்த பிரச்சனை குறித்து ஆராய்ந்து சரியான முடிவு எடுத்து அதன் விபரத்தை சபையார் அனைவருக்கும் தெரிவிக்க வேண்டும்.

ஒருவேளை மற்ற சபைகள் பின்பற்றும் மார்க்க சம்பந்தமாக கேள்விகளை கேட்டால் அதற்கு வேத விளக்கங்களை கொடுக்கவேண்டுமே அல்லாமல் அந்த சபைகளை குறித்து தவறாக கற்பிக்க கூடாது.

மற்ற சபைகளை பாராட்டுவதால் எங்கே தனது சபை விசுவாசிகள் மற்ற சபைகளுக்கு சென்றுவிடுவார்களோ என்று அச்சப்பட தேவையில்லை. கிறிஸ்துவே சபையின் தலைவராக செயல்பட்டு மனந்திரும்பும் ஆட்களை சபையில் சேர்த்துவருகிறார் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். (அப் 2:47) ரோமன் கத்தோலிக்கர்கள் லூத்தரின் கருத்துக்களை தவறாக நினைத்ததும் புரோட்ஸ்டினர், பெந்தேகோஸ்தே சபையினிரன் கருத்துக்களை தவறாக நினைத்ததும் தற்போதுள்ள கிறிஸ்தவ அமைப்புகள் பைபிள் மாணக்கர்கள் மற்றும் அவர்களின் பிரிவினர்கனான ஏகோவின் சாட்சிகளின் கருத்துக்களை தவறாக நினைப்பதும் தொடர்ச்சியாக நடந்துவருகிறது. இவ்விதமான தவறான எண்ணங்களை விட்டுவிட்டு நாம் கிறிஸ்தவர்கள் என்று

ஒருமனதோடு செயல்பட்டால் சத்தியத்திற்கு **சாட்சிகொடுக்கும்** வேளையானது சிறப்பாக செயல்படும். அதை தடுக்கவே சாத்தான் மற்ற சபைகளை பற்றிய தவறான எண்ணங்களை நம்மில் விதைக்கிறான். வைராக்கியம் கோபம் இவற்றால் தேவனுடைய சித்தத்தை சரியாக செய்யமுடியாது . எனவே பிசாசுக்கு இடங்கொடுக்காதிருப்போமாக.

சபையில் உள்ள விசுவாசிகள் மேய்ப்பர்களுக்கும் கண்காணிகளுக்கும் அடங்கி நடக்கவேண்டும். நமக்கு சத்திய அறிவை கொடுத்த ஆசிரியரை மதித்து நடக்கவேண்டும். ஒரு நபர் முதுநிலை பட்டபடிப்பைபெற அவர் ஆரம்ப நிலை வகுப்பை கடந்தே வரவேண்டும். அப்படி முதுநிலை பட்டப்படிப்பை பெற்றவர் தமது ஆரம்பநிலை வகுப்பு ஆசிரியரை மதிக்கவேண்டுமே அல்லாது எனக்கு தெரிந்த காரியங்கள் அவருக்கு தெரியாது என பெருமை பாராட்டகூடாது.

அதுபோல நாம் நமக்கு ஆரம்ப சத்தியங்களை போதித்தவர்களை நமக்கு தேவன் அளிக்கும் ஞானத்தால் குறைவாக மதிப்பிட்டால் அத்தகைய ஞானம் பெருமைக்குரியதாக கருதப்பட்டு தேவனிடத்திலிருந்து நமக்கு சாபத்தையே கொண்டுவரும். நம் கற்றுக்கொண்டுள்ள சத்தியங்களை நம் வாழ்க்கையில் பயிற்சிசெய்யவேண்டும். தேவனுக்கு ஏற்ற காரியங்களை சிந்திப்பதும் நம்முடைய வாழ்க்கையில் அவற்றை கடைபிடிப்பதும் முக்கியமாக இருக்கவேண்டும். (ரோ 2:18-24) வெறுமானே நாம் கற்றவற்றை பிறருக்கு போதிப்பதைவிட அவைகளை முதலில் நாம் கடைபிடித்து அதன்பின்பு மற்றவர்களுக்கு போதிப்பதுதான் சிறந்த கிறிஸ்தவ ஊழியமாகும். தேவனுடைய அன்பு, இரக்கம், நீடிய பொருமை, கிருபை மற்றும் நீதியாக நியாயதீர்ப்பு பற்றிய தெளிவான போதனைகளை சபைகளில் போதிக்க வேண்டும். யோ 6:26, 27 மற்றும் 1 கொரி 15:19ன் படி உலக பிரகாரமபன ஆசீர்வாதங்களை பெறுவதற்கு மட்டுமே ஆசீர்வாத கூட்டங்கள் மற்றும் உபவாச கூட்டங்கள் நடத்துவதைதவிடுத்து தேவனுடைய நித்திய ஜீவ ஆசீர்வாதங்களை பெறுவதற்காக சபை விசுவாசிகளை கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தப்படுத்தும் ஆயத்த கூட்டங்கள் நடத்துவதுதான் முக்கியம் என்பதை உணர்ந்துசெயல்பட வேண்டும்.

நாம் எப்படிப்பட்ட அழைப்பை பெற்றிருந்தாலும் நாம் சார்ந்திருக்கக்கூடிய சபை அடிப்படையிலோ நம்முடைய சத்திய அறிவின் அடிப்படையிலோ நியாயந்தீர்க்கபட போவதில்லை என்பதை தெளிவாக புரிந்துகொள்ளவேண்டும். முடிவாக நீங்கள் எந்த சபையில் ஐக்கியம் வைத்துள்ளீர்கள் என்பதைவிட **நீங்கள் தனிப்பட்ட விதத்தில்** தேவனுக்கு பிரியமான காரியங்களை செய்துவருகிறீர்களா என்பதை அறிந்து செயல்படுங்கள்.

பைபிள் போதனைகள் சத்தியங்கள்பற்றிய சந்தேகங்கள் மற்றும் கேள்விகளுக்கு தொடர்ந்து எங்களுடன் (biblicaltruthtamil77@gmail.com) என்ற இமெயில்மூலம் தொடர்புகொள்ளுங்கள் "தேவனுடைய அன்பிலே உங்களை காத்துக்கொண்டு நித்திய ஜீவனுக்கு ஏதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய இரக்கத்தை பெற காத்திருங்கள். அல்லாமலும் நீங்கள் பகுத்தறிவு உள்ளவர்களாயிருந்து சிலருக்கு இரக்கம் பாராட்டி சிலரை அக்கினியிலிருந்து இழுத்துவிட்டு பயத்தோடே இரட்சித்து மாம்சத்தால் கரைபட்டிருக்கிற வஸ்திரத்தையும் வெறுத்து தள்ளுங்கள். வலுவாதபடி உங்களை காதக்கவும் தனது மகிமையுள்ள சன்னிதானத்தில் மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவரும் தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாகிய நம்முடைய இரட்சகரான தேவனுக்கு கனமும் மகத்துவமும் வல்லமையும் அதிகாரமும் இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக. ஆமென்.யூதா 21:25.======´´´´´´´´´´´´´´´´´´´´´´´´´

# CSI COIMBATORE DIOCESE
# HOLY TRINITY CSI CHURCH CONVENTION - SALEM JUNCTION



சேலத்தில் நான் அங்கத்தினனாக இருக்கும் என் சபை நடத்திய **கன்வென்ஷனிலேயே** நான் பிரசங்கித்தது எனக்கு மிகவும் திருப்தியாகவும்,சந்தோஷமாகவும் இருந்தது. கர்த்தருக்கே ஸ்தோத்திரம் உண்டாவதாக.

சபையின் மக்கள் வசனத்தை மிகவும் அமைதியாய் கவனித்ததும்,வசனத்தை பிரசங்கிக்க மிக அதிக நேரம் எடுத்துக்கொள்ளும்படி ஆயர் அவர்கள் அதிக நேரம் ஒதுக்கியதையும் நினைத்து தேவனை துதிக்கிறேன்.

மக்களும் வசனத்துக்கு முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்துவிட்டார்கள் என்பதை உணர முடிந்தது. அதற்காக கர்த்தரை துதிக்கிறேன்.

- பெண்கள் ஐக்கிய சங்கத்தினர் **ஒரு பகல்** தியான கூட்டம் நடத்தி அதில் என் மனைவி **Mrs.Vathani Pushparaj** அவர்களையும், **Dr. Benita Samuel, M.D.** அவர்களையும் உபயோகித்தனர். தேவன் நாமம் மகிமைப்பட்டது. சபை பெண்களுக்கும் மிகவும் பிரயோஜனமாக இருந்ததாக கூறினர்கள்.

இப்படியாக இந்த **சபை வசன தாகத்தோடு வளர்வதை** கண்டு சபை மக்களிடையே ஒரு விழிப்புணர்வு உண்டாகியிருக்கிறது என்று அறிந்து தேவனை துதிக்கிறேன்.

இந்த சபையின் ஆயர் **Rev. E.Robert Kevin** அவர்கள் இக்கூட்டங்களை நல்ல ஜெப ஆயத்துடன் கூட்ட ஏற்பாடுகளை செய்திருந்தார். கர்த்தர் நாமம் மகிமைப்பட்டது.

- If Evolution is true, and man is only an accident,an aimless wanderer in time and space, moving futilely between points of illusionary happiness, tragedy,achievement,pain..
- If man is,himself, the greatest power over his existence and yet,in the multitudinous causes and effect surrounding him, even he has almost no control...
- If man's hope is no more than to exist until by chance he ceases to exist-
If evolution is true, then there is no existence more miserable than man's because, of all living beings, he alone is hopeless and miserable, and he alone has the awareness of self to know it,
- who would champion such a depressing belief? and who would want to convert others to it, through subverting and destroying a faith based hope for a better life to come?

- betty burton choate

**MAY 2017**

# Printed Book

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.